விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 வைகாசி 13 றம்ழான் 17 இதழ் 105

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 27 5-1986

## இலங்கையிலிருந்து பல்தேசியக் கம்பனிகள் வெளியேறவேண்டும்

### 'ஈரோஸ்' அறிக்கை

[சென்னை]

இலங்கையில் நிலைகொண்டுள்ள பல்தேசியக் கம்பனிகள் இலங்கையை விட்டு வெளியேறிவிட வேண்டும் என 'ஈரோஸ்' இயக்கம் சென்னையில் விடுததுள்ள அறிக்கையொன்றில் எச்சரித்துள்ளது.

திருமலை மிட்சூய் சிமெந்துத் தொழிற்சாலை தகர்க்கப்பட்டது இந்த பல்தேசியக் கம்பனிகளுக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கவே எனத்தனது அறிக்கையில் கூறியுள்ள இவ்வியக்கம், எச்சரித்துள்ளபடி பல்தேசிய கம்பனிகள் இலங்கையைவிட்டுவெளியேருவிடில் அவர்களின் தொழிற்சாலைகள், கம்பனிகள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்படும் எனக்கூறியுள்ளது.

### நிதியமைச்சர் அறிக்கை

'ஈரோஸ்' இயக்கத்தின்இவ்வறிக்கைபற்றிக் கருத்துவெளியிட்ட நிதி அமைச்சர் திரு.

(6ம் பக்கம் பார்க்க)

# 'இலங்கைக்கான உதவிகளை நிறுத்துக' - நெதர்லாந்து அரசுக்கு அகதிகள் நலன்காக்கும் நிறுவனம் கோரிக்கை

(லண்டன்)

**இலங்கைக்கு நெதர்லாந்து அரசாங்கம் அளித்துவரும் சகல உதவிகளையும் உடனடியாக நிறுத்தவேண்டுமென நெதர்லாந்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் நலன்களைக் கவனிக்கும் ஸ்தாபனமான இலங்கைச் செயற்குழு அந்நாட்டு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

அங்கு நடந்த கருத்தரங்கு ஒன்றில் இவ்வேண்டுகோளை விடுத்த மேற்படி ஸ்தாபனம் ''இலங்கையில் ராணுவ நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதுடன் அங்கு அடிப்படை மனித உரிமைகளும் மீறப்படுகின்றன. மேலும் இலங்கையின்இனப்பிரச்னைக்கு ராணுவத் தீர்வே காணப்படும் என இலங்கைத் தலைவர்கள் கூறிவருகின்றனர். இதனுல் நெதர்லாந்து அரசினுல் இலங்கைக்கு வழங்கப்படும் சகல உதவிகளும் நிறுத்தப்பட வேண்டும்'' எனக் கோரியுள்ளது.

இலங்கையின் தற்போதைய நிலை பற்றி நேரில் ஆராய்வதற்குப் பார்வையாளர் குழுவொன்றை அனுப்ப ஐ. நா. சபையிம் கோரப்போவதாகவும், அப்படி ஒரு குழுஇலங்கை செல்லும்பட்சத்தில் இலங்கை அரசு சிறிது கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளக் கூடுமென்றும் இது இனப்பிரச்னையில் சமாதானத் தீர்வுக்கு வழி வகுக்கும் எனவும் மேற்படி ஸ்தாபனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது மேலும் இலங்கை, இந்தியஅரசுகள் தமிழ் குழுக்கள், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மற்றும்மத குருமார் ஆகியோரைக் கொண்ட அனைத்துலக சமாதான மாநாடொன்று நடத்தப்படுவதும் நல்லதென மேற்படி ஸ்தாபனம் கருத்து வெளி

(6-ம் பக்கம் பார்க்க)

## ஒருவர் விடுதலை

[கொழும்பு]

விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட 'ஈழநாடு' கொழும்பு பிரதிநிதிகளில்

(6-ம் பக்கம் பார்க்க)

## சந்நிதி நிர்வாகிகள் ஜூன் 2ல் ஜனதிபதியை சந்திப்பார்கள்

[யாழ்ப்பாணம்]

தொண்டமானுறு செல்வச் சந்நிதி ஆலய நிர்வாகிகளை அடுத்தமாதம் 2-ம் திகதி தம்மைச் சந்திக்கும்படி ஜனதிபதி யாழ் அரசாங்க அதிபர் மூலம் அறிவித்தலொன்றை விடுத்துள்ளார்.

சந்நிதி கோவிலில் நிகழ்ந்த அனர்த்தங்களால் ஏற்பட்டுள்ள அழிபாடுகளுக்கு நஷ்டஈடு வழங்குவது சம்பந்தமாக இச்சந்திபபின்போது முடிவு செய்யப்படும் என்று நம்பப்படுகிறது.

சந்நிதி கோவிலில் நடந்த அனர்த்தங்கள் பற்றிய ஆதாரபூர்வமான அறிக்கைக்

[6ம் பக்கம் பார்க்க]

## "திருமலை சிங்கள மக்கள் கொலை: அரசாங்கமே காரணம்" அமிர் அறிக்கை

(சென்னை)

கடந்த சில நாட்களில் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நடைபெற்ற சம்பவங்ளினுல் சுமார் 100 தமிழர்களும், 32 சிங்களவர்களும் கொல்லப்பட்டுள்ளதை மனித நேயத்தை மதிக்கும் எவரும் ஆதரிக்க முடியாது எனத் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பொதுச்செயலர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறியுள்ளார்.

இதுசம்பந்தமாக திரு. அமிர்தலிங்கம் சென்னையில் விடுத்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

'கடந்த சில தினங்களுக்கு முன்னர் திருமலையில் சிங்கள மக்கள் கொல்லப்பட்ட சம்பவம், தமிழ் மக்களின் கிராமங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றும் இலங்கை அரசின் இனவாதக் கொள்கையின் விளைவாகவே தூண்டப் தூண்டப்பட்டது. 83 ம்

[4ம் பக்கம் பார்க்க]

## வவனியாவரை ரயில்சேவை: தொடர்ந்து நடத்த அரச அதிபர்கள் கோரிக்கை

[வவனியா]

வெசாக் தினத்தையிட்டு வவனியாவரை இடம் பெற்ற ரயில் போக்குவரத்துச் சேவையை, வடபகுதிப் பிரயாணிகளின் நன்மைகருதி தொடர்ந்தும் வவனியாவரை நடாத்துமாறு யாழ்ப்பாணம் வவனியா அரசாங்க அதிபர்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் கோரியுள்ளனர். (மா)

## வல்வைச் சம்பவங்கள்: இன்று அறிக்கை கையளிப்பு

(வல்வெட்டித்துறை)

கடந்த வாரம் வல்வெட்டித்துறையில் நடந்த பீரங்கித் தாக்குதல்களாலும் பொம்பர்களின், குண்டுவீச்சுக்களினுலும் சேதமுற்ற கட்டிடங்கள் பற்றிய அறிக்கைகள், புகைப்படங்கள், பாதிக்கப்பட்டோரின் அறிக்கைக் கோவைகள் யாவும் இன்று வல்வைப் பிரஜைகள் குழுவினரால் யாழ் அரச அதிபரிடம் கைய

[6-ம் பக்கம் பார்க்க]

## 10,000 ரூபா சன்மானம்

(கொழும்பு)

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் மிளகாய் லொறியொன்றிலிருந்து 5 கிலோ வெடிமருந்து இருப்பதைப்பற்றி பொலிஸாருக்குத் தகவல் கொடுத்த தொழிலாளிக்கு 10 000 ரூபாசன்மானம் வழங்கப்படுவதென்று பொலிஸ் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

## சிங்களக் கிராமங்களின் பாதுகாப்பு அதிகரிப்பு!

[கொழும்பு]

கிழக்குக் கரையோரப் பகுதியிலுள்ள சிங்களக் கிராமங்களின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துளது.

அண்மைக்காலததில் இக்கிராமங்களில் வசிக்கும் பல சிங்கள மக்கள் தமிழ்த் தீவிரவாதிகளினுல் கொலைசெய்யப்பட்டதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

## பங்களாதேஷில் கோரம்: படகுவிபத்தில் 500 பேர் பலி!

[புதுடில்லி]

பங்களாதேஷில் நேற்று முன்தினம் இடம்பெற்ற படகு விபத்தொன்றில் சுமார் ஐந்நூறு பேர் இறந்திருக்கலாமென அஞ்சப்படுகிறது.

தென்வாரிசால் மாவட்டத்தில் மோல்வியாத் என்ற இடத்துக்கருகில் இக்கோர விபத்து நிகழ்ந்துள்ளது.

வாலாவிலிலிருந்து டாக்கா நோக்கி மோகனுநதியூடாகச் சென்ற இரண்டடுக்கு பிரயாணிகள் படகொன்று கடும் புயலினுல் சிக்குண்டு ஆற்றின் நடுவில் கவிழ்ந்த தாலேயே அதிலிருந்த இந்த 500 பயணிகளும் மரணமானதாக பங்களாதேஷ் வானெலி அறிவித்துள்ளது. இதுபற்றிய மேலதிக தகவல்கள் வெளியிடப்படவில்லை.

ஒருமாதத்திற்குள் பங்களாதேஷில் நடைபெற்ற இரண்டாவது மிகப்பெரிய கோர படகுவிபத்து இதுவாகும். கடந்தமாதம் 3-ம் திகதி இடம்பெற்ற படகு விபத்தொன்றில் இருநூறுக்கும் அதிகமான பயணிகள் இறந்தமை குறிப்பிடத்தக்கது.

## முக்கிய அறிவித்தல்

23-5-86ல் எம்மிடம் திருப்பி வந்துசேர்ந்த எமது ஆலய நகைகளோடு எமக்குச் சொந்தமல்லாத சங்கிலிகள், காப்புகள், மோதிரங்கள் என்பனவும் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றுக்கான சரியான ஆதாரம் காட்டினுல் உரியவரிடம் ஒப்படைக்கலம். இதுபற்றி யாழ் அரசாங்க அதிபரிடமும் தெரிவித்துள்ளோம். சரியான சான்றுகளோடு உரிமைகோராத பட்சத்தில் இவற்றை அகதிகள், அநாதைகள் நலனுக்குப் பயன்படுத்துவோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். எழுத்துமூலம் சகல விபரமும் சான்றும் அமையக் கூடியதாக 15-06-86க்கு முன்பு தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தவஸ்தானம், தெல்லிப்பழை என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

தங்கம்மா அப்பாக்குட்டி J. P.
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

[C- 2516]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

National வீடியோ டெக் N V, 340 J V C. T.V 20'' 7808 (Remote Control) Technic Two in one விற்பனைக்கு உண்டு ஒருவர் பாவித்தது. 37, பிரப்பங்குளம்றோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [C2521]

அச்சுவேலி சந்தி மகிழடிவயிரவர் கோவிலுக்கு அண்மையில் பிரக்கிராசியார் ஏகாம்பரநாதனின் வீட்டுக்கு அருகாமையில் நல்லசுற்றுடலில் வீடுகட்டுவதற்கு உகந்தமூன்று பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- S ஐயாத்துரை, பழைய விதானையார் வளவு, ஆவரங்கால். [C2520]

உயர்விளைச்சலைப்பெற்றுசெய்கையாளரால் விரும்பி வாங்கும் பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெண்காய விதை விற்பனைக்குண்டு. குறுகிய கையிருப்பு. ஒரு கிலோ 250-00. பிள்ளையார் மெர்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C 2379]

உடுவில் ஆக் [Ark] லேனில் வீட்டுடன் 1½ பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு S. I. Watson, Ark Lane, Uduvil. [C-2486]

### தேவை

சோப் தயாரிக்கும் இயந்திரம் சகல உபகரணங்களுடன் உடன்தேவை. விபரங்களுக்கு: க. இராசலிங்கம், ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். [C 2526]

ஒருவரின் சொந்த பாவிப்பில் உள்ள நல்ல நிலையான வெஸ்பா ஸ்கூட்டர் (Vespa) தேவை. விபரங்கட்கு: 3, நவீன சந்தை, மேல்மாடி, யாழ்ப்பாணம். (C2528)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்றுவர பஸ், பவுசர், லொறி செலுத்துவதில் அனுபவமும் திறமையும் மிக்க சாரதிகள் உடன் தேவை. குடிப்பழக்கமற்றோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பம் செய்ய விரும்புவோர் நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; சிறீ மகள் ரேடேர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C-2494)

### தவறிவிட்டது

எனது வங்கி பாஸ்புத்தகம் 200 ஸ்ரேலிங் பவுணுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் விலாசத்தில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். எஸ். மயில்வாகனம், 493, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (A 2519)

11-05-86 ஞாயிறு காலை பரந்தன் மலசல கூடத்திற்கு அருகாமையில் பெரிய நீல கல்லுமோதிரம்தவறிவிட்டது. நேர்த்திக்கடனுக்கு செய்யப்பட்டது. கண்டெடுத்தவர்கள் அதனை கீழ் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். உரிமையாளர் யோகலிங்கம் கோண்டாவில் அல்லது M. சதாசிவம், லலிதா யுவலரி, கண்டிறோட், கிளிநொச்சி. C-2514

---

**யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச்சங்கம்(வரை)**
**420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

### அறிவித்தல்

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்தில் பங்குகள் வைத்திருப்போரும், 1985ம் ஆண்டில் பங்குகள் வாங்குவதற்குப் பணம் செலுத்தியோரும் தங்கள் பங்குகளின் விசேடித்த இலக்கங்களை / பற்றுச்சீட்டு இலக்கங்களைகுறிப்பிட்டு 05-06-1986க்குமுன் எனனுடன் நேரில் அல்லது கடிதமூலம் தொடர்புகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இ. வசந்தசேனன்,
26-05-86. காரியதரிசி.
[A690]

---

**சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. உ.)**

### வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தரம் பிரிக்கப்பட்ட 3000 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்குண்டு. வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்தி விண்ணப்பப் படிவம் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் பதிவுத் தபால்மூலம் இடது பக்க மூலையில் 'வெற்றுச் சாக்குகள் கேள்வி' என எழுதப்பெற்று பொது முகாமையாளர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதி 30-5-86.

**பொது முகாமையாளர்.**
சங்கானை பல நோக்குக்-கூட்டுறவுச் சங்கம்.
25-5-86. A 689

---

### ஈராண்டு நினைவஞ்சலி



**கேசவன் கோவிந்தபிள்ளை**
(மிருதங்க தொழில் நுட்பக்கலைஞர்)
தோற்றம்: 15-05-1919
மறைவு: 19-05-1984
திதி: 28-05-1986

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எங்களைவிட்டு ஒருபோதும் மறையாது.

திருமதி லக்ஷ்மி கோவிந்தபிள்ளை
விஜயகுமார்
(குடும்பத்தினர்)

கோவிந்தபிள்ளை விஜயகுமார்,
'மிருதங்கதொழில் நிலையம்',
19°/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(C 2449)

---

### அந்தியேட்டி அழைப்பு



**வேலுப்பிள்ளை கந்தையா**
[ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்]
தோற்றம்: 22-09-1911
மறைவு: 28-04-1986

எங்கள் குடும்பத் தலைவர் அமரர் வேலுப்பிள்ளை கந்தையாவின் அந்தியேட்டிக்கிரியைகள் 28-05-1986 புதன்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. உற்றார், உறவினர், நண்பர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்.

பழைய ஆஸ்பத்திரி வீதி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி. C 2525

---

### 2-ம் வருட நினைவஞ்சலி



**கந்தப்பு ஸ்ரீபன் தேவராஜா**
அன்னை மடியில்: 22-08-1946
அமலன் மடியில்: 27-05-1984

''சீவியத்தில் நேசித்த வரை மரணத்திலும் மறவோம்''.

உமது பிரிவால் துயருறும்

அன்பு மனைவி,
பிள்ளைகள்.

''ஜெயமகால்'',
இல. 7, கற்குழி ஒழுங்கை,
சாவகச்சேரி.
(C 2292)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

---

### 2-ம் வருட நினைவஞ்சலி



**திருமதி மங்கையற்கரசி கனகரத்தினம்**
(ஆசிரியை)
மறைவு: 27-05-1984

ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட அன்புத்தெய்வமே, என்னை விட்டுப் பிரிந்துசென்றாலும் உன் நினைவு என்னை விட்டகலா. கணவன்

வே. கனகரத்தினம்,

A-2 / F-4 புளுமண்டல் தொடர்மாடி,
கொழும்பு-13.
(C 2517)

---

### சம்பள உயர்வு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு 100 ரூபா சம்பளஉயர்வு இம் மாதம் தொடக்கம் வழங்குவது என்று சங்க இயக்குனர் சபை தீர்மானித்துள்ளது.

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்க பண்டத்தரிப்பு கிளை தமக்கு அரசாங்கத்தால் கடந்த ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட சம்பள உயர்வுகளை வழங்கப்பட வேண்டும் என்று சங்க நிர்வாகத்தை கேட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

### வல்வை மக்கள்வங்கி இயங்கவில்லை

[வல்வெட்டித்துறை]

வல்வெட்டித்துறையில் அண்மையில் நடைபெற்ற பொம்பர் குண்டு வீச்சினால் வல்வெட்டித்துறை மக்கள் வங்கிக் கட்டிடம் முற்றாகச் சேதமடைந்ததைத் தொடர்ந்து வங்கி செயற்படாமல் இருக்கிறது.

இதனையடுத்து இங்கு வருகை தந்த பிராந்திய முகாமையாளர் இவ்வங்கியை வேறிடத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். இதற்குப் பொருத்தமான கட்டிடம் தேடப்பட்டு வருகிறது. அனேகமாக வல்வெட்டிப்பகுதிக்கு இவ் வங்கி இடம் மாறுமென நம்பப்படுகின்றது.

---

உ
கணபதி துணை

### வரவேற்புபசார அழைப்பு

கொல்லங்கலட்டி தியாகராசா தம்பதிகளின் சிரேஷ்டபுத்திரன் உருத்திரகோடீஸ்வரனுக்கும் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடமேற்கு லக்ஷ்மணபிள்ளை தம்பதிகளின் புதல்வி இசைவாணிக்கும் வைகாசி 14 (28-05-1986) புதன்கிழமை பகல் 11-28-11-52 வரையிலுள்ள சிங்க லக்கின சுபமுகூர்த்தத்தில் மணமகளில்லத்தில் திருமணம் நடைபெறும்.

மேற்படி திருமண வைபவத்தை முன்னிட்டு மணமகனில்லத்தில் வைகாசி 15 (29-05-1986) வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறும் வரவேற்புபசாரத்தில் குடும்ப சமேதராக வந்து கலந்து கொண்டு மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
கலாநிதி வ. கணேசலிங்கமும் பாரியாரும்,
ஸ்ரீலஸ்ரீ வ. குமாரசுவாமிகுருக்கள்
திரு. வ. மகாலிங்கமும் பாரியாரும்.

கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை. (C 2527)

---

### பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ கனடா
★ ஜேர்மனி ★ பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு உடனடியாக பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

6 படங்கள், பாஸ்போட்டுடன் தொடர்பு கொள்ளவும்:

**T. துரைசிங்கம்,**
(உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகாமை)
ஞானப்பிரகாசம் வீதி, மல்வம்,
உடுவில், சுன்னாகம்.
[C-2473]

---

### விஷேட அறிவித்தல்

த. குமாரசாமி ரெக்ஸ் ரைல்ஸ், 42-44, பெரிய கடை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்திருந்த ஸ்தாபனம், அண்மையில் ஏற்பட்ட அனர்த்தங்களால், 272 (352), நாவலர் வீதியில் அமைந்திருக்கும், எமது இல்லத்தில் தொடர்ந்து இயங்கி வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம். வாடிக்கையாளர்கள் குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

**த. குமாரசாமி**
**ரெக்ஸ்ரைல்ஸ்,**
**272 (352), நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(A-709)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணி வாக்கு

வாழ்க்கை நிறைந்த அறிவியலின் பாற்பட்டது. நிறைந்த அருளியற் சார்புடையது. வாழ்க்கையின் ஆழத்திற்கும் அகலத்திற்கும் உயர்வுக்கும் எல்லை யில்லை.

— குன்றக்குடி அடிகளார்

# நமது நோக்கு

## தீவுப்பகுதியில் உணவுப் பஞ்சம் தீரவழியுண்டு

பண்ணைப்பாலம் வழியாகப் போக்குவரத்துச் செய்வது ஆயுதப்படைகளின் முற்றுகையினால் பல நாட்களாகத் தடைப்பட்டுள்ளது.

யாழ். கோட்டையில் ராணுவமுகாம் இருக்கும் வரை, அப்பகுதியில் ராணுவத்தினருக்கும் போராளிகளுக்குமிடையிலான மோதல்கள் நிற்கும் வரை பண்ணைப்பாலம் வழியாக பொதுமக்கள் பிரயாணம் செய்ய எத்தனிப்பது புத்தியல்ல. அவ்வாறுஎத்தனித்த பலர் இன்று உயிரோடு இல்லை அல்லது குண்டடிபட்டும் தாக்குதலுக்குள்ளாகியும் நோயாளர்களாகியுள்ளனர்.

இந்த நிலைமையினால் தீவுப்பகுதியில் உணவுப்பஞ்சம் தலைதூக்கும் அபாயம் ஏற்பட்டிருப்பதாகச்செய்திகள் வருகின்றன.

நாம் இப்பத்திகளில் ஏற்கனவே வலியுறுத்தியதற்கமைய தீவுப்பகுதி மக்கள் வேலணைக் கரையிலிருந்து அராலித் துறைவழியாக குடாநாட்டின் ஏனையபகுதிகளுடனான தொடர்புகளை மேற்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். இதனால் அராலித்துறை சனசந்தடி மிக்க பகுதியாக மாறிவருகின்றது இத்துறை வழியாக தீவுப்பகுதிக்கான அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிச்செல்வதற்குப வர்த்தகர்கள் முயற்சி எடுக்கிறார்கள். கூட்டுறவு மொத்த ஸ்தாபனம் போன்ற ஏனைய பொதுநிறுவனங்களும் இப்பாதை வழியாக உணவுப் பொருட்களையும், ஏனைய அத்தியாவசியச் சாமான்களையும் எடுத்துச் செல்வார்களானால் அங்கு உணவுப்பஞ்சம் என்ற பேச்சுக்கே இடமிராது.

இக்கட்டான சமயங்களில் இப்பாதையை மக்களும் வர்த்தகர்களும் பயன்படுத்திக்கொள்ளும் விதத்தில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென நாம் ஏற்கனவே வற்புறுத்தியதற்கமையப் பல பொது நிறுவனங்கள் இதில் அக்கறை கொண்டிருப்பது மகிழ்ச்சி தருகின்றது. தீவுப்பகுதிப் பிரஜைகள் குழுவினர் யாழ்ப்பாணம் அரச அதிபரைச் சந்தித்துப் பேசியதன் காரணமாக இதன் அபிவிருத்திக்கென அவர் மூன்று லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.

பண்ணைப் பாலம் வழியாகச் செல்லும் பாதையால் பொதுமக்கள் அபாயமின்றிப் போய்வர முடியாத சமயங்களில் அராலித் துறை வழியாகவுள்ள பாதையைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இப்பாதையிலுள்ள தடைகளை நீக்கவும், வசதியான படகுகளைச் சேவைக்குவிடவும் இப்பணம் பயன்பட வேண்டும்.

அளவுக்குமீறிய பொதிகளை ஏற்றுவதன்மூலம் கடற் பயணத்தைச் சிலர் அபாயகரமாக்க முயல்வதாகக் கூறப்படுகின்றது. வள்ளக் கட்டணமும் 15 ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாம். இது விடயத்தில் சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்த அதிகாரிகள் முன்வந்தால் நல்லது.

அராலித்துறை அபிவிருத்தியடையுமானால் கல்லுண்டாய், காக்கைதீவுப் பகுதியும் அபிவிருத்தியடையும் அங்கு வெளியாகக் கிடக்கும் பகுதிகளில் மக்கள் குடியேற்றம் அதிகரிக்க வழியுண்டு.

## பாராட்டுகின்றோம்!

கொள்ளையடிக்கப்பட்ட தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலய நகைகள் யாவும் சரியாக ஒரு வருடம் இரண்டு மாதங்களின் பின்னர் மீளக்கிடைத்திருக்கும் விடயம் சைவ மக்களை மாத்திரமல்ல தெய்வ நம்பிக்கையுள்ள அனைவரையுமே மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கொள்ளை நடந்து இவ்வளவு நாட்கள் கடந்தபின்னர், இனி திரும்பக் கிடைக்கும் என்ற நம்பிக்கையெல்லாம் அற்றுப் போன நிலையில் மிக ஆச்சரியமான முறையில் அந் நகைகள் யாவும் உருக்குலையாமல் திரும்பக் கிடைத்திருப்பது ஆலய நிர்வாகிகளுக்கு ஆச்சரியத்துடன் கூடிய இரட்டிப்பு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கும்.

''அம்பாள்பக்தர்கள் பக்தி சிரத்தையுடன் செய்து கொண்டவேண்டுதல் பலித்துள்ளது'' என ஆலய தர்ம கர்த்தா சபைத் தலைவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இதுபற்றி வெளிப்படையாகக் கூறி மகிழ்ந்துள்ளார்.

வடக்கில் பெருமெடுப்பில் நடைபெற்ற ராணுவ நடவடிக்கை ஆரவாரங்களின் காரணமாக மேற்படி கோயில் நகைகள் திரும்பக் கிடைத்தவிடயம் அதிமுக்கியத்துவம் பெறாமல் போய் விட்டது. எனினும் இப் பகுதியின் சமீபகால வரலாற்றில் இது குறித்துவைக்கவேண்டிய ஒரு சம்பவம் என்பதை யாரும் மறுக்க மாட்டார்.

தவறிழைப்பதென்பது மனித சுபாவம், தவறை உணர்ந்து பிராயச்சித்தம் செய்வதென்பது இந்தக்காலத்தில் நடப்பதில்லை எனவே ஆலய நகைகளைத்திரும்பக்கொடுத்தவர்களை (எவராய் இருந்தாலும்) நாம் மனமாரப் பாராட்டுகிறோம்,

வேறு வழிபாட்டு ஸ்தலங்களில் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களும் உரியவர்களிடம் திரும்பக் கொடுக்கப்படும் என்றும் நம்புகின்றோம்.

### ஆசிய - ஆபிரிக்க நாடுகளில்

# அடிமைத்தளைநீங்க போராடிய மாமேதை

ஆயிரம் மலர்கள்மலரும் அவனியிலே, அவை பூவுக்கு ஒரு நிறமாகப்பூத்துக் குலுங்கிடும் புவனத்திலே,... 22 ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் (மே27ல்) அம்மலர்கள் கரு நிறமாக மலர்ந்தன ரோஜாவின் ராஜா'' என்று செல்லமாக உலக மாந்தர்களால் அழைக்கப்பட்ட, மானிடத்தை நேசித்த இந்தியப்பிரதமர் பண்டிட்ஜவகர்லால் நேருமறைந்த தினமாகும்அந்த நாள்.

இலங்கை வரலாற்றில் களனிகங்கைக்கு இரண்டு முக்கியத்துவம் உண்டு.ஒன்று புத்தர் பெருமான் தன் வாழ்நாளிலேஇங்கு ஒருமுறை விஜயம் செய்தது இரண்டாவதுமகாத்மாகாந்தியின் அஸ்தி அந்தக் கங்கையிலே கலக்கப்பட்டது. அந்த அஸ்தி அங்கேகரைக்கப் பட்டபோது ஜவகர்லால்நேரு சொன்னார். அகிம்சா ரீதியில் செல்லும் இரு நாடுகளையும் நட்புரீதியில்பிரிக்கமுடியாது; ஆனல் நான் ஒன்றை மாததிரம் சொல்லி வைக்கின்றேன் ''பாதுகாப்பு விடயத்தில் எம்மை நீங்கள் புறக்கணித்து நடப்பீர்களாயின் பின்பு ஒரு நாள் அல்லல்ப்படுவீர்சள்.''

நேருஇதனைச்சொல்லிக் கிட்டத்தட்ட38வருடங்கள்! இலங்கையிலோ இயாலய மாற்றங்கள் இலங்கை அவர் வழியிலே செல்லுமா,இன்றேல்ஆபத்தில் மாட்டிக் கொள்ளுமா என்ற கேள்வியை ஜவகர்லால் நேரு தனது இறந்தநாளிலே நினைவு ஊட்டிக் கொண்டிருக்கிறார்.

எங்கே சுதந்திரம் இல்லையோ அதுவே என்நாடு; அங்கே என் ஆத்மா இருக்கும் எனப் போராடியவர் அவர். புகழ் பூத்த மோதிலால் நேரு குடும்பத்தில் பிறந்தும் மத வைராக்கியத்தின் முதல் எதிரி ஜவகர் இந்து மகாசபையினரின் சமயரீகியான கோரிக்கைகளையோ சையட் அகமட்கானின் அதி தீவிர இஸ்லாமியக் கோட்பாடுகளையோ அவர் ஆதரித்தது கிடையாது. முஸ்லீம்கட்குப் பாரசீகத்தில் இல்லாத உரிமைகளைப் பாரதத்தில் காண்பார்கள் என உதிகூறிய அவர் இந்துக்களுக்குச் சொர்க்கத்தில் இல்லாத சுதந்திரத்தைப் நவ இந்தியாவில் கொடுப்பேன் எனத் தனது இதயத்தை திறந்து பேசினர். இந்த இரு பெரும் சமுதாயம் ஒன்றுபட்டு நவ இந்தியாவைப் படைக்க வேண்டும் என்று முரசொலி கொட்டிய நாவேந்தன் அவர்.

புரட்சிக் கருத்தால் மக்கள் எழுச்சியினையும் கண்டு ஒரு தசாப்தத்துற்கு இந்திய அரசியலில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தார். ஆசிய இலக்கியங்களை எவ்வாறு எடைபோட்டாலும் நாம் வைத்திருக்கும் ஒரு தட்டு இலக்கியத்துக்கு ஈடாகாது எனச் சொல்லி வைத்தார். மக்காலே என்ற பிரிட்டிஷ் ஆளுனர் அவர் குறிப்பிடும் இலக்கியத் தட்டிற்கு மிகப்பெரும் பெருமையினை நேரு இந்திராவிற்கு எழுதிய கடிதங்களும், ''The Discovery of India'' என்ற நூலும் அளிக்கத் தவவில்லை. ஷேக்ஷ்ப்பியரை இங்கிலாந்து இழக்காது என்றநிலை ஜவகர்லால் நேருவுக்கும் பொருத்தமானதே.

## பண்டிட் நேரு நினைவுநாள் சிந்தனை

புழுதிபாடிப் புதுஅரசியல் படைத்தவர். அவர் இந்திய சுதந்திரத்துக்காக 9 ஆண்டுகள் சிறையிலே வாடினர். எனது ஆசை எல்லாம் இந்தச் சூரியவெளிச்சம் எனது உடம்பிலே படவேண்டும் என்பது தான் என எழுதினர் அவர்.

### திக்கவயல் தர்மகுலசிங்கம்

அந்தக் கனவு இன்று நனவாகிக் கொண்டிருக்கின்றது.

அழகான ஆங்கிலத்தை ஆசியாவில் எழுதி அழியாப் பெருமைபெற்றவர். அவர் எழுத்தினல் புரட்சியினையும்

ஆசிய மக்களும், ஆபிரிக்க மக்களும் அடிமைத்தலையில் இருந்து விடுபட அவர் முயற்சியால் கூட்டிய பாண்டுங் மகாநாடு வித்திட்டது. [1955] இந்த மாநாட்டிலே பேசிய முன்னள் இந்தோனேஷிய ஜனதிபதி சுகர்ணோ பிரபல்யமான அமெரிக்கக் கவிஞரான லோங் பெலோவின் பால்ரிவாராவின் நள்ளிரவுச் சவாரி என்ற கவிநூலில் இருந்து சில உதாரணங்களை எடுத்துக் காட்டினர் அதுமாத்திரம் அன்றி ஆசிய, ஆபிரிக்க மக்களுக்கு எழுச்சியை ஊட்டியது அமெரிக்கப் புரட்சியே என்றும், அந்தப் புரட்சியின் முதல் துப்பாக்கி வெடி உலகெங்கும் கேட்டது என்றும் கவர்ச்சிகரமாகப் பேசினர். ஜவகர்லால் நேரு இதனை ஆமோதித்தது மாத்திரமன்றி அப்புரட்சி ஆசிய, ஆபிரிக்க மக்களுக்கு சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்தை வெகுவிரைவில் ஈட்டிக்கொடுக்கும் என்று தனது ஆதங்கத்தை வெளியிட்டார்.

ஹிந்தி மொழி இந்தியாவின் பழம் மொழிகளான தமிழ், மராட்டி, வங்காளம் போன்று அதிகபாரம்பரியம் அற்றது என்பதை நேரு ஒத்துக்கொண்டார் ஆனல் இந்தியாவின் பொது மொழியாகவும் இணைப்பு மொழியாகவும் இருக்கும் வல்லமை ஹிந்தி மொழிக்குத்தான் உண்டு என ஜவகர்லால் நேரு தனது சுயசரிதையில் எழுதினர். ஆங்கிலம் இணைப்பு மொழியாக ஒருபோதும் இருக்காது என

[6ம் பக்கம் பார்க்க]

## வீரமாகாளி அம்பாள் விழா நாளை ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

வண்ணை அருள்மிகு ஸ்ரீவீரமாகாளி அம்மன் மஹோற்சவம் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து 25 நாட்களுக்கு திருவிழாக்கள் நடைபெறும்.

அடுத்த மாதம் 6-ம் திகதி வசந்தோற்சவமும்,17-ந் திகதி கைலாசவாகனத் திருவிழாவும், 18-ந் திகதி வேட்டைத் திருவிழாவும், 19-ந் திகதி சப்பரத்திருவிழாவும், 20-ந் திகதி தேர்த்திருவிழாவும், 21-ந் திகதி நண்பகல 12 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

தினமும் காலை 10 மணிக்கும் மாலை 6 மணிக்கும் வசந்த மண்டபப் பூசை நடைபெறும்.

தேவஸ்தான பிரதமகுரு நடராஜ சிவசுப்பிரமணியக் குருக்கள் தலைமையில் உற்சவங்கள் நடைபெறும். [ஐ]

## சத்திய புருஷர் சரத் அண்ணச்சி

உண்மையை இடித் துரைக்கும்
உத்தமன் சரத் அண்ணவே
நன்மையை அடித்துச் சொல்லும்
நாவலன் சரத் அண்ணவே
கைம்மையைப் போக்க வந்த
காவலன் சரத் அண்ணவே
எம்மையே ஏங்க விட்டு
எங்கு நீ சென்ற யையோ

உரிமைகள் சகலருக்கும்
உண்டென்று வாதிட்டாயே
பெறுவதில் பேதமில்லை
பேணியே காத்திட்டாயே
மக்களின் மாட்சிக்காக
மன்றத்தில் வாதிட்டாயே
சத்திய புருஷா
சரத் முத்தெட்டுகமவே

நெய்க்குடம் உடைந்து போனல்
நாய்க்கது வேட்டையாகும்
கைக்குடம் தவறிப் போனல்
கன்னியின் முகமே வாடும்
பொற்குடம் சரத்தண்ணச்சி
பொழுதெலாம் மக்கட்காக
பற்றுடன் சேவை செய்தாய்
பாழ் விதி கொண்டு போச்சு

— வ. யோகானந்தசிவம்

## வெயிலுகந்த விநாயகர் விழா

[யாழ்ப்பாணம்]

நாயன்மார்கட்டு ஸ்ரீவெயிலுகந்த விநாயகர் தேவஸ்தான மணவாளக் கோலத் திருவிழா நாளை புதன்கிழமை நடைபெறும்.

பகல் விசேட அபிஷேகமும் மாலை திருவிழாவும் நிகழும்.

(ப)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உலகின் 80 நாடுகளில்

# காலத்தை வெல்லும் 'ஸ்போட்ஸ்எய்ட்' நிகழ்ச்சி!

நியூயோர்க், மே-26

உலகின் பிரமாண்டமான விளையாட்டு நிகழ்ச்சி என்று வர்ணிக்கப்பட்ட 'ஸ்போட்ஸ் எய்ட்' ஆபிரிக்க பட்டினி நிவாரண மரதன் ஓட்ட நிகழ்ச்சி சுமார் 80 நாடுகளில் நேற்று ஏககாலத்தில் இடம் பெற்றது. உலகின் பிரபல விளையாட்டு வீரர்கள், ராஜதந்திரிகள், அரசியல்வாதிகள், கலைஞர்கள் உட்படக் கோடிக்கணக்கானவர்கள் இந்த 'ஸ்போட்ஸ் எய்ட்' நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்தனர்.

இந்த 'ஸ்போட்ஸ் எய்ட்' நிகழ்ச்சியை ஆரம்பிப்பதற்கான தீப்பந்தம் சூடான் நாட்டிலிருந்து அமெரிக்காவுக்குச் சில வாரங்களுக்கு முன்னர் எடுத்துவரப்பட்டது.

சூடான் நாட்டு ஒலிம்பிக் வீரரான ஒமா கலீபா 'நம்பிக்கைத் தீபம்' என்ற இப்பந்தத்தைச் சூடானிலுள்ள அகதி முகாமொன்றில் ஏற்றிய பின்னர் ஐரோப்பாவின் 12 நாடுகளூடாக நேற்று நியூயோர்க் வந்தடைந்தார்.

தொடர்ந்து இங்குள்ள ஐ.நா. ஸ்தாபனத்தில் இவர் ஐ நா. செயலாளரிடம் இப்பந்தத்தைக் கையளித்ததைத் தொடர்ந்து 'ஸ்போட்ஸ் எய்ட்' பந்தயங்கள் உலகளாவிய ரீதியில் ஆரம்பமாகின.

மேற்கு, கிழக்கு ஆபிரிக்கா உட்பட 80 நாடுகளில் இந்த 'ஸ்போட்ஸ் எய்ட்' பந்தயம் ஆரம்பமானது.

பிரிட்டனில் பாடகர் பொப் கில்டொவ்ப் இந்த 'ஸ்போட்ஸ் எய்ட்' நிகழ்ச்சியை ஆரம்பித்துவைத்தார்.

(5ம் பக்கம் பார்க்க)

பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜேர்மனி ★ பிரான்ஸ்

★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும் மற்றும்

பாஸ்போட், பொன்ட் (BOND), விசா, ரிக்கற்

ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ளவும்:

INTERSUN GROUP,

சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய்.

குறிப்பு: எமது முகவர் ஜூன் 1ந் திகதி டென்மார்க் அழைத்துச் செல்வார். A706

# தமிழகத்திலும் 'ஸ்போட்ஸ்எய்ட்'

சென்னை, மே-26

தமிழ்நாட்டிலும் 'ஸ்போட்ஸ் எய்ட்' ஆபிரிக்க பட்டினிநிவாரண நிதி சேகரிப்பு ஓட்டப் பந்தயம் நேற்று முன்தினம் மிக விரிவான முறையில் இடம் பெற்றது.

ஐயாயிரம்பேர் இதில் பங்குபற்றினர். ஒலிம்பிக் ஹாக்கி வீரர் பாஸ்கரன் தமிழக ஆளுநர் வாசஸ்தலத்திலிருந்து

(5-ம் பக்கம் பார்க்க)

# இஸ்ரேலிய ஆக்கிரமிப்பிலுள்ள பாலஸ்தீனர்கள் நலன்கள் கவனிக்கப்படவேண்டும்

ஜெருசலம், மே-26

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அரபுப் பிரதேசங்களிலுள்ள பாலஸ்தீன மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இஸ்ரேல் விரிவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சர் தெரிவித்துள்ளார்.

திருமதி தட்சர் ஜெருசலத்துக்கு நேற்று விஜயஞ் செய்திருந்தார். அங்கு இஸ்ரேலியப் பிரதமருடன் உரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேற்காசியாவில் அமைதித் தீர்வுகாணும் முயற்சிகளை இஸ்ரேல் மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார். அத்துடன் பாலஸ்தீன மிதவாதத் தலைவர்களுடன் சமரசத் தீர்வுகளை மேற்கொள்ள இஸ்ரேல் முன்வரவேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

பிரிட்டன் மேற்காசிய அமைதித் திட்டத்திற்குப் போதியளவு ஆதரவளிகுமென்றும் திருமதி தட்சர் தெரிவித்தார். [கி]

'வறுமைபோக்க

# அமெரிக்காவுக்கு குறுக்கே பெரும் 'மனிதச் சங்கிலி'

வாஷிங்டன், மே-26

அமெரிக்காவில் பட்டினியையும், வீடு வசதிகளின்மையையும் போக்கும் வகையில் வட அமெரிக்கக் கண்டத்துக்குக் குறுக்காக மாபெரும் மனிதச் சங்கிலி ஒன்றை அமைத்து நிதி சேகரிக்கப்பட்டது.

கலிபோர்ணியா முதல் நியூயோர்க் வரை இந்தக் கரங்கள் கோர்த்த மனிதச் சங்கிலி 4000 கிலோ மீட்டர்கள் தூரத்தைக் கொண்டிருந்தது.

அமெரிக்க அதிபர் திரு. றீகனின் வெள்ளை மாளிகை வளவூடாகவும் இச்சங்கிலி அமைக்கப்பட்டிருந்தது. இதில் றீகனின் குடும்பத்தவரும் கைகோர்த்திருக்கக் காணப்பட்டனர்.

தொடர்ச்சியாக நீண்டிருந்த இச்சங்கிலி கரிசோனா, நியூமெக்ஸிக்கோ ஆகிய பாலைவனங்களின் ஊடாக மட்டும் முறிவடைந்திருந்தது. இப்பாலைவனங்களில் நிலவிய மிதமிஞ்சிய வெப்பமே இந்த முறிவுக்குக் காரணமென்று தெரிவிக்கப்பட்டது.

சுமார் 50 கோடி டாலர்களை இந்த மனிதச் சங்கிலி அமைப்பின்மூலம் பட்டினி நிவாரணம் மற்றும் வீட்டு வசதிகளுக்கெனச் சேர்ப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. [கி]

உலகச் செய்திகள்

## கூட்டுறவு இலாகா இடம் மாறியது

(நெடுந்தீவு)

கூட்டுறவு இலாகாவின் அபிவிருத்தி அலுவலகம் இடமாற்றம் செய்யப்படவுள்ளது.

இதன் முன் ஏற்பாடாக சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பகுதி மூன்றும் குறுக்குத் தெருவிலுள்ள கூட்டுறவு இலாகாவின் எண்பார்வை அலுவலகத்திற்கு தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளது.

இப்பொழுது தாராளமாகக் கிடைக்கிறது

Lanka cement

லங்கா சீமெண்ட்



விலை ரூபா 96/- மாத்திரமே.
(50 கி.கி/ தொழிற்சாலையிலிருந்து)
1978ன் B.S.S.12 தரத்திற்கமைந்தது.

உரமும் உறுதியும் நாடுவோர் தேடி வாங்குவது - லங்கா சிமென்ட்

லங்கா சீமெந்து லிமிட்டெட்

கீரிமலை வீதி, காங்கேசன்துறை

Phoenix

[A-492]

பிரயாண ஒழுங்கு

டென்மார்க்

★ அபுடாபி (Labour)
★ லிபியா (Labour)
★ சிங்கப்பூர் பணிப்பெண்கள் முதலிய பிரயாண ஒழுங்குகள் உடனடியாக செய்துகொடுக்கப்படும்.

டென்மார்க் பிரயாணிகளை எமது முகவர் 30-ம் திகதி அழைத்துச்செல்வார். உடனடியாகதொடர்பு கொள்ளவும்.

யூனிவேசல் ஏஜென்சி

125 (455), ஸ்ரான்லி வீதி,
(பெற்றோலியம் கூட்டுத்தாபன அத்தியடிச்சந்தி ஆயுள்வேதக் கல்லூரி அருகாமை )யாழ்ப்பாணம்.
A 708

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமது படகு யந்திரத்தை தாமே கடலில் போட்டார்

## மீன்களையும் பறிகொடுத்தார்

[வல்வெட்டித்துறை]

கடலில் கட்டுமரத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த பொலிகண்டிக் குடியேற்றப் பகுதியைச் சேர்ந்த மீனவரொருவருக்கு அருகில் வந்த கடற்படையினர் அவரிடமிருந்து மீன்களை எடுத்துக் கொண்டதுடன் அவரதுகட்டுமரத்தில் பூட்டப்பட்டிருந்த ஒன்பது குதிரைவேக சக்தியுடைய அவுட்போட் மோட்டரையும் கடலில் வீசச்செய்தனர்.

மோட்டரைக் கடலில் வீசும்படி படையினர் கூறவே அதனைக் கடலில் வீசுவதற்கு மீனவர் தயங்கியதாகவும் இதனைத் தொடர்ந்து கடற்படையினர் ஆகாயத்தை நோக்கிச் சுட்டதாகவும் பயத்தினல் அம் மீனவர் கடற்படையினர் கூறியபடி மோட்டரை வீசியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் அம் மீனவர் தான் சிறிது தூரம் துடுப்பினல் கட்டுமரத்தை வலித்துக் கொண்டு வந்தபின்னர் இன்னெரு கட்டுமர மீனவரின் உதவியுடன் கரை வந்து சேர்ந்தாராம்.

## சேவை நலம் பாராட்டுவிழா



(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. த. தருமலிங்கம் அவர்களது சேவையைப் பாராட்டி எதிர்வரும் 28ந் திகதி புதன் கிழமை ''சேவை நலப் பாராட்டுவிழா'' திரு குருசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும்.

யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகவும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வட்டாரக் கல்வியதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தியும், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு ஏ. பஞ்சலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வார்கள்.

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்திலிருந்து ஊர்வலமும், பாடசாலை மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். [ஐ]

# ஆசிரியர் இடமாற்றங்கள்

[நேற்றைய தொடர்ச்சி]

### கல்முனைக்கு

திருமதி கே. ஜெபரட்ணம், மங்கன் மகாவித்தியாலயம், முருங்கன். செல்வி எஸ். சிவராணி, தமிழ் பாலிகா வித்தியாலயம், பதுளை. திரு. ஏ எம் நாதீர், ராஜஜ்மன முஸ்லிம் மகா வித்தியாலயம், மடவல உள்பத்தா. திரு. எம். எம். சறிப், ஹமீட அல் ஹுசைன்மகா வித்தியாலயம், கொழும்பு-12,

திருமதி எஸ். எஸ். பௌசியா உம்மா ஜெயிலானி, மத்திய மகாவித்தியாலயம், பலாங்கொட. திருமதி எஸ். ஜெயமோகன், அன்நகார் மகாவித்தியாலயம், மூதூர். திருமதி என். துரைராஜசிங்கம், கலகா தமிழ் வித்தியாலயம், கலகா. திரு. சி. சிவஞானமூர்த்தி, லுணுபொக்குன, றோயன் தமிழ் வித்தியாலயம், கொழும்பு-15 திருமதி எம். எல். சித்திரமீன, டெடிகம முஸ்லிம் வித்தியாலயம், டெடிசய திருமதி. பி சந்திரராஜா கிளிவெட்டி மகாவித்தியாலயம், கிளிவெட்டி திரு எம், கமால்டீன் அல் குமெய்சாரா மத்திய மகாவித்தியாலயம், பேருவல. திருமதி எஸ், ஒலிவர் பிரபாகரன் பேரற்றுவெளி 'மகாவித்தியாலயம், கந்தளாய்

### திருகோணமலைக்கு

கே. ஏ. ரகுமான், எல்லவீவா முஸ்லீம் வித்தியாலயம், கெப்பிட்டிக்கொல்லாவ திரு ஏ. எம் சாயிட்அலி' முஸ்லீம் மகாவித்தியாலயம், மாகோ. திரு எஸ்.விநயநாதன். தலத்துஓயா தமிழ் வித்தியாலயம், தலத்துஓயா.

திரு. எம். ஐ எம். அசீஸ், அல் அமீன் வித்தியாலயம், இறக்காமம்.

### கொழும்பிற்கு

திருமதி என். பாலகிருஷ்னன் தொண்டமானறு மகாவித்தியாலயம் தொண்டமனறு. ஏ எம். நியாஸ் டிச்சேன தமிழ் வித்தியாலம். கல்பனை. திரு எஸ், ஆர். மரைக்கார், சங்காடிக்குளம், முஸ்லீம் வித்தியாலயம், ஆனைமடுவ. திரு. சுபைருள்அமீர், கிஜ்ரா வித்தியால

(6ம் பக்கம் பார்க்க)

## காலத்தை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

10 கிலோ மீட்டர்கள் ஓட்டத்தை இந்த 'ஸ்போட்ஸ் எயட்' பந்தயம், அது இடம் பெற்ற ஒவ்வொரு இடங்களிலும் கொண்டிருந்தது 'காலத்தை வெல்லும் ஓட்டம் என இந்த 'ஸ்போட்ஸ் எயட்' பந்தயம் அழைக்கப்பட்டிருந்தது. [கி]

## தமிழகத்திலும்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

'ஸ்போட்ஸ் எய்ட்' தீப்பந்தத்தை ஏந்திச்சென்று அஞ்சல் ஓட்டமாக அண்ணா சாலையிலுள்ள அண்ணா சிலைவரை கொண்டுசென்றனர்.

முப்படை உத்தியோகத்தர்கள், சாரணர்கள் உட்பட நடிக, நடிகைகளும். ஏனைய முக்கியஸ்தர்களும் இந்தப் 10 கிலோமீட்டர்தூர ஓட்டத்தில் பங்கேற்றனர்.

பிரபு, கார்த்திக், தியாகராஜன் போன்ற நடிகர்களும், ஸ்ரீபிரியா, மனோரமா, லக்சுமி உட்பட பல முன்னணி நடிகைகளும் இந்த ஓட்டப் பந்தயத்தில் கலந்துகொண்டனர்.

இந்த 'ஸ்போட்ஸ் எய்ட்' பந்தயத்திற்கு தமிழக முதல்வர் எம். ஜி இராமச்சந்திரன் 2 லட்சம் ரூபா நன்கொடை வழங்கினர். நடிகர் திலகம் சிவாஜிகணேசன் பத்தாயிரம் ரூபா வழங்கினர்.

10 லட்சம்ரூபா நிதியை தமிழகம் இந்த ஸ்போஸ்எய்ட் நிகழ்ச்சி மூலம் வசூல் செய்ததென்று தெரிவிக்கப்பட்டது. (கி)

# வெளிவாரி சட்டப்பரீட்சை பதிவுகள் புதுப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

1985 ம் ஆண்டுக்கான பரீட்சைக்குத் தோற்றுத வெளிவாரி சட்டப்படிப்பு மாணவர்களுக்கு மேற்படி பரீட்சைக்கான பதிவை இவ்வாண்டுக்கு புதுப்பித்துக் கொடுப்பதற்குக் கொழும்பு பல்கலைக்கழக நிர்வாகம் இணங்கியுள்ளது.

பதிவைப் புதுப்பிப்பதற்கான வண்ணப்படிவங்கள் சென்ற ஆண்டு நடைபெற்ற பரீட்சை முடிவுகளுடன் அனுப்பி வைக்கப்படும்.

நாட்டு நிலைமை காரணமாக சென்ற ஆண்டு நடைபெற்ற மேற்படி பரீட்சைக்கு நாற்பதுக்கும் மேற்பட்ட தமிழ் பரீட்சாத்திகள் தோற்றவில்லை.

இவ் விடயம் குறித்து வெளிவாரி சட்டப்படிப்பு மாணவர்கள் யாழ். அரசாங்க அதிபரைச் சந்தித்து விளக்கினர்.

இம் மாணவர்கள் பதிவைப் புதுப்பித்துக் கொள்ள அனுமதி அளிப்பதாக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் இணங்கியுள்ளார் என யாழ் அரசாங்க அதிபர் மேற்படி மாணவர்களுக்குத் தெரிவித்துள்ளார். (ஐ)

### மயிலிட்டி வடக்கில் பாதிக்கப்பட்டவர்கள்

# நிவாரணப் படிவங்களை நிரப்பிக்கொடுக்கவேண்டும்

[மாவிட்டபுரம்]

மயிலிட்டி வடக்கு பகுதியில் பாதிக்கப்பட்ட மக்கள் தமது நிவாரணப்படிவங்களை உரிய முறையில் பூர்த்திசெய்து ஒப்படைக்கத்தவறுனல்நிவாரண உதவிகளை பெற்றுக்கொள்ள முடியாதநிலை ஏற்படுமென மயிலிட்டி வடக்கு பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது.

பலாலி இராணுவ முகாம் விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்டு வெளியேறிய மயிலிட்டி வடக்குப்பகுதி மக்களுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளபோதும் பாதிக்கப்பட்டவர்கள் இதற்கு ஒத்துழைப்பு தருவதாக இல்லையென தெரிவிக்கப்படுகிறது.

மயிலிட்டி வடக்கு பிரஜைகள் குழுவினர் மாவிட்டபுரம் கிராமமுன்னேற்றச்சங்க மண்டபத்தில்வைத்து நிவாரண வேலைகள் மேற்கொண்டுள்ளனர்.

அவர்களுடன் தொடர்பு கொண்டு நிவாரணப்படிவங்களை எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் பெற்று உடன் பூர்த்திசெய்து வழங்கி நிவாரணங்களை பெறுமாறு பாதிக்கப்பட்டவர்களை பிரஜைகள் குழு கோரியுள்ளது.

இதுவே இறுதி சந்தர்ப்பம் எனவும் இதைநழுவவிடவேண்டாமெனவும் மேலும் கோரப்பட்டுள்ளது.


**வெலிங்டன்**

10-30, 2-30, 6-15

மோகன் - பூர்ணிமா - சுஜாத்தா-ஜெய்சங்கர் நடித்த

**விதி**

(கலர் - புதிய பிரதி)

**லிடோ** இன்று முதல்

தினசரி காலை 10-30, 2-30 மாலை 6-30

சரத்பாபு, சரிதா நடித்த

**நூல் வேலி**

[புதியபிரதி-கலர்]

எமது அடுத்த வெளியீடு: முத்துராமன். சுஜாதா நடித்த

**மயங்குகிறுள் ஒரு மாது**

[புதியபிரதி-கலர்]

**லிபேட்டி சினிமாவில்**

வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்

துப்பாக்கிவீரன்

James Coburn

கவர்ச்சி அழகி

Sophia Lorence

நீக்ரோ அழகன்

Jim Brown நடித்த

FIRE POWER

5 பதக்கங்கள் பெற்ற மாபெரும் வெளியீடு.

10-00, 2-15, 4-15, 6-30

வயது வந்தவர்களுக்கு மட்டும்


# இன்றைய பலன்

மாதம்- வைகாசி
திகதி- 13 (1986-5-27)
கிழமை- செவ்வாய்
திதி- சதுர்த்தி பி. ப. வரை
நக்ஷத்திரம்-பூராடம் மு. ப. வரை.

மேடம்- புதிய தொழில் மூலம் இலாபம் கிடைக்கும், புத்திரகளுடைய செல்வாக்குப் பெருகும், புதுமையான எண்ணகள் மனதில் வட்டமிடும்.

இடபம்- அதிகாரக் குறைவிற்கு இடமுண்டு, அபாயகரமான தொழில்களில் ஈடுபடுபவர்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

மிதுனம்- குடும்பவாழ்வில் மனத்திற்கு நிம்மதி பிறக்கும், நீண்டநாள் பூமிப்பிணக்கு சமரசமாக முடியும்.

கடகம்- அதிக சிந்தனை சிறிய தலையிடியைக் கொடுக்கும், உடல்நலம் பாதிக்கப்படலாம், விளைபொருள்களில் பணம் விரயமாகலாம்.

சிங்கம்- குருவின் உபதேசம் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும், தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவும் உண்டு

கன்னி- பிரயாணத்தில் பொருள் நழுவக்கூடும், நம்பிக்கை வைப்பத [illegible] பணம் பறிபோகலாம், புதிய தொழில்களை பின்போடவும்.

துலாம்- அன்புக்கரங்கள் அணைக்கும், அதிர்ஷ்ட தேவதையின் பார்வையும் பதியலாம், சகோதரசுகமும்உண்டு.

விருச்சிகம்- திரைமறைவில் சதித்திட்டம் உருவாகும். அடுத்துக்கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர், சிலருக்கு நூதன ரோகம் தென்படலாம்.

தனுசு- வசதிகள் பெருகும், வாழ்க்கையும் வளமாகும், தொழில்துறையில் புதிய வெற்றிகளும் கிடைக்கும், சுப தினம்

மகரம்- பொருள்துறையில் எதிர்பாராத நெருக்கடி ஏற்படும், புதியமுதலீடுகளைத் தவிர்க்கவும், தொழில் புரியும் இடத்தில் அவதானம் நன்று.

கும்பம்- தொழில்புரியும் இடத்தில் போட்டி மனப்பான்மையைத் தவிர்க்கவும், சகோதர சுகக்குறைவிற்கும் இடமுண்டு.

மீனம்- தாய்வழி பெருமைகள் சேரும், தனசதுடன் வாழ்வும் கிடைக்கும், எதிரிகள் கூட உங்களை வரவேற்பார்கள்.


**மாயமில்லை! மந்திரமில்லை!**

**MCTயில் நீங்களே பார்ப்பீர்!**

போனேன் அங்கே
சொன்னேன் நம்பரை
என்ன அதிசயம்!

சொல்லி முடியமுன் ரெலிபோன் அடிக்குது!
கொடுத்த மறுகணம் ரெலெக்ஸ் பறக்குது!
என்ன வேகம்! என்ன வேகம்!

இரவும் பகலும் இவர்கள் கைகளில்
பம்பரமாகச் சுழலுதே உலகம்!

'ஷெல்'லும் குண்டும் தொல்லை தராத
நல்ல சூழல்;
நிம்மதியாக
எந்த நேரமும் சென்று வரலாம்
அங்குள்ள அறைகளில் தங்கியும் செல்லலாம்
இம்மட்டோ!



நினைத்தவுடனே
வெளிநாட்டுப்
பயணம்.

குறைந்த விலையில்
விமானச்சீட்டு

பாஸ்போட், விசா:

மின்னல் வேகம்!

கண்டதுமில்லை கேட்டதுமில்லை
இப்படி ஒன்றை!

சர்வதேச ரெலிபோன், ரெலெக்ஸ்,
பிரயாண சேவைகளுக்கு

MCT

Mack Communication & Travels,

இல. 8, முதலாவது ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
Telephone: 24791, 24836.

**டென்மார்க்** செல்ல விரும்புபவர்கள் உடனே தொடர்புகொள்க

CONTACT US FOR AIR TICKETS,
CONFIRMATIONS, RECONFIRMATIONS ETC.

MCT

[A 500]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
செவ்வாய்க்கிழமை 27-5-86

# வல்வை மக்கள் வங்கி உடுப்பிட்டி செல்லத் 'தடை'

(வல்வெட்டித்துறை)
குண்டுவீச்சினுல் சேதமடைந்த வல்வை மக்கள்வங்கிக் கிளையை உடுப்பிட்டிக்கு மாற்றும் நடவடிக்கைகளை மேற்படி வங்கி வாடிக்கையாளர்கள் தடுத்துள்ளனர்.

மேற்படி வங்கிக்கிளை உடுப்பிட்டி ப. நோ. கூ சங்கத்திற்கு அண்மையில் இடமாற்றம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாயினும், நேற்றுக்காலை வங்கிக்குச் சென்ற வாடிக்கையாளர்கள் இக்கிளையை வல்வைநகரசபை எல்லையில் இடமாற்றம் செய்யத்தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்வரை வங்கிதிறக்கப்படக்கூடாது எனக் கூறியுள்ளனர்.

# துப்பாக்கி முனையில் அன்னதானம்

[ஒட்டுசுட்டான்]
வெசாக் கொண்டாட்டத்தை முன்னிட்டு ஒட்டுசுட்டான் இராணுவத்தினர் அன்னதானம் வழங்கினர். கடந்த வெள்ளிக்கிழமை முகாமிற்கு அருகாமையிலுள்ள அரசாங்க சிற்றூழியர்கள் சிலரையும், முகாமிற்கு ஒருமைல் சுற்றுடலில் வசிக்கும் பொதுமக்களில் ஆண், பெண் உட்பட 300 பேரையும் ஜீப் வண்டிகளில் துப்பாக்கிமுனையில் அழைத்து வந்து அவர்கள் அன்னதானம் வழங்கினுர்கள்.

இதையடுத்து புகைப்படங்கள், ரி. வி. படங்கள் எடுக்கப்பட்டன.

இறுதியில் ஜீப் வண்டிகளில் மக்களைஏற்றி அவர்களது சொந்த இடங்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தனர்.

## யாழ். பல்கலைக்கழகத்தில்

# மாணவர் தாக்கப்பட்டதற்கு 'மாணவர் அவை' கண்டனம்

[யாழ்ப்பாணம்]
யாழ். பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக மாணவர்கள் சிலர் தகுந்த விசாரணையின்றித் தாக்கப்பட்டது தொடர்பாகத் தமது கண்டனத்தைத் தெரிவிப்பதுடன் பாதிக்கப்பட்ட அப்பாவி மாணவர்களுக்கு எமது மனவருத்தத்தையும் தெரிவிப்பதென்று யாழ். பல்கலைக்கழக மாணவர்அவை முடிவெடுத்துள்ளது.

மாணவர் அவையினுல் எடுக்கப்பட்ட ஏனைய முடிவுகள் பின்வருமாறு!

''ஒரு சில மாணவர்களினுல் பல்கலைக்கழக உடமைகள் சேதமாக்கப்பட்டது தொடர்பாகவும் ஊழியர்கள் துன்புறுத்தப்பட்டது தொடர்பாகவும் பலத்த கண்டனம் தெரிவிப்பதுடன் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தகுந்த தண்டனை விரைவில் வழங்கப்படவேண்டும் என்று நிர்வாகத்தை கோருவதுடன் அதற்கான முழுமையான ஒத்துழைப்பு வழங்குவது, சில மாணவர்களின் நடவடிக்கையினுல் பாதிப்படைந்த ஊழியர்களுக்கு எமது மனவருத்தங்களைத் தெரிவித்துக்கொள்ளுதல்; ''மேலும் கடந்த காலங்களில் ஒரு சில சம்பவங்களைத் தவிர எல்லா விடயங்களிலும் மாணவர்களுக்கும் ஊழியர்களுக்குமிடையில் நல்லுறவு நிலவு வந்திருக்கிறது எதிர் காலத்திலுல் நல்லுறவு நிலவுவதற்கு இரு சாராரும் உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேம்''

## சமூக விரோதிக்கு

# மின்கம்பத் தண்டனை

[மட்டக்களப்பு]
கொள்ளை, கற்பழிப்புப் போன்றசமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்ட இளைஞரொருவர், விடுதலை இயக்கமொன்றினுல் சுட்டுக்கொல்லப்பட்டு மின்கம்பத்தில் கட்டிவைக்கப்பட்டார்.

மட்டக்களப்பு மாநகரசபைப் பகுதியிலுள்ள நாவற்குடாவைச் சேர்ந்த கணேசன் (26 வயது)என்பவருக்கே இத்தண்டனை வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை மின்கம்பம் ஒன்றில் இவரது சடலம் கட்டிவைத்திருக்கக் காணப்பட்டது. [மா]

## பெரிய புல்லுமலைச்சம்பவங்கள்:

# பூரணவிசாரணை நடத்துமாறு ஜனுதிபதிக்கு தந்தி

(மட்டக்களப்பு)
அப்பலாந்துறையிலும் பெரியபுல்லுமலையிலும் உள்ள தமிழர்களின் வீடுகளிலிருந்து சொத்துக்களைச் சூறையாடிவிட்டு அவ்வீடுகளுக்குத் தீமூட்டி எரித்து நாசம் விளைவித்தது பற்றிப் பூரண விசாரணை நடாத்தும்படி மட்டக்களப்புப் பிரஜைகள் குழு ஜனுதிபதிக்கு அவசரத்தந்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

கடந்த 22ம் திகதி அம்பலாந்துறையில் 42 வீடுகளும் பெரியபுல்லுமலையில் 100 வீடுகளும் எரிக்கப்பட்டதுடன், அவ்வீடுகளிலிருந்த உடைமைகளும் சூறையாடப்பட்டிருந்தன. இதனுல் பாதிக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்து அகதிளாகி ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சம் புகுந்துள்ளன.

பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த தம்பிட்டிய, கூளாவடி ஆகிய கிராமங்களின் ஊர்காவல் படையினரே இந்த அனர்த்தங்களை விளைவித்ததாகவும் பிரஜைகள் குழு அத்தந்தியில் சுட்டிக்காட்டியுள்ளது. (மா)

# ஒருவாரத்திற்கு மேலாகியும் வீடுதிரும்பவில்லை

(பண்டத்தரிப்பு)
பண்டத்தரிப்பிலிருந்து இம்மாதம் 19ம் திகதி திங்கட்கிழமை காலை வசாவிளான் ஊடாக சைக்கிளில் அச்சுவேலிக்குத் தொழிலுக்கு சென்ற21 வயதுடைய அலக்ஸ் யஸ்ரின் என்ற இளைஞர் இதுவரை வீடுதிரும்பவில்லை

வசாவிளானில் இடம்பெற்ற அசம்பாவிதசம்பவங்களில் இவரும் அகப்பட்டிருக்கலாம் என்று இவரது பெற்றேர் அச்சமடைந்துள்ளனர். இவரது மர்ம மறைவு பற்றியாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு எம் பஞ்சலிங்கத்திடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

# கவுணுவத்தை வேள்வி சனியன்று நடக்கும்

(பண்டத்தரிப்பு)
வடபகுதியில் மிருகபலிக்கு பிரசித்திபெற்ற ஆலயமான கீரிமலை சவுணுவத்தை வைரவர் ஆலயத்தில் எதிர்வரும் சனிக்கிழமையன்று வேள்வி (மிருகபலி) நடைபெற விருப்பதாக அறியப்படுகின்றது. இப் பகுதியைச் சேர்ந்த பலர் போட்டாபோட்டியுடன் ஆட்டுக்கடா வளர்ப்பில் ஈடுபட்டுவருவதாகவும், இம்முறை இங்கு அதிகளவில் ஆட்டுச் சடாக்கள் பலியிடப்படவிருப்பதாகவும் அறியப்படுகிறது

## பல்தேசிய...

[1ம் பக்கத் தொடர்ச்சி]
ரொனிடிமெல் திருமலைச்சம்பவத்தினுல் எந்த ஒருபல்தேசிய கம்பனியும் பாதிக்கப்படவில்லையாதலால் அவர்கள் நாட்டை விட்டுவெளியேற மாட்டார்கள் எனத் தாம் நம்புவதாகக் கூறியுள்ளார். (செ)

## வல்லைச்சம்பவம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]
ளிக்கப்படும்.

அத்துடன்ஷெல் தாக்குதல், குண்டு வீச்சினுல் சேதமுற்றிருக்கும் சிவகுரு வித்தியாசாலையை இடமாற்றம் செய்வது பற்றியும் இப்பாடசாலை அதிபர் பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள்யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளரையும் சந்தித்து உரையாடவுள்ளனர்.

## திருமலையில் சிங்கள..

[1ம் பக்கத் தொடர்ச்சி]
ஆண்டு ஜூன் மாதம் முதல் இதுவரை திருமலை மாவட்டத்தில் சுமார் 1000 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 6000 வீடுகளும் எரிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக அகதிகளாக வேறிடம் சென்றுள்ள தமிழ்மக்கள் தமது பழைய இடங்களுக்குச் செல்வதை துருப்புகள் தடுத்துவருகின்றன. (செ)

## ஆசிரியர்

(5ம் பக்கத் தொடர்ச்சி)
யம், அக்கரைப்பற்று. ஏ. எம். சரீள், பானப்பிட்டியா முஸ்லிம் வித்தியாலயம். கரந்தெனியா. அப்துல்சத்தார் கிர்சத் சனிஸ்ட வித்தியாலயம் ஹாலி எல. வை. எம். சாலந்தீன் அல்கமார் முஸ்லிம் வித்தியாலயம் நாறந்கொட ஏ. ஏ சலீம் அல்பார்க்கன் மகாவித்தியாலயம், கலேவெல.

# யானை தாக்கி ஒருவர் பலி; இருவர் காயம்

[கிளிநொச்சி]
கிளிநொச்சிப்பகுதியில் சில கால இடைவெளியின் பின்னர் காட்டுயானைகளின் கோரத்தாண்டவம் மீண்டும் தலைதூக்கியதால் ஊற்று என்னும் கிராமப்பகுதியில் தொழிலாளி ஒருவர் பலியானுர்.

இந்த யானைக்கூட்டத்தின் வெறித்தனமான தாக்குதலுக்கு ஊற்று விக்கினேஸ்வரபுரம் விநாயகர் ஆலயக் குருக்கள் சிவஸ்ரீ பாலசுபபிரமணியக் குருவும் அவரது மனைவியான திருமதி எஸ். பாலசுப்பிரமணியமும் படுகாயமடைந்தார்கள்.

இவ்விருவரும் உடனடியாகக் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டு அவசர சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்குச் கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## இலங்கைக்கான,..

[1ம் பக்கத் தொடர்ச்சி]
யிட்டுள்ளது.

## நிபுணர் கருத்து

இதனிடையே இலங்கை அரசு, சர்வதேசகூலிப்படைகளின் உதவியுடன் தமிழர்க்கெதிரான இன ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக 'டச்கவுன்ஸில் ஒவ் சேர்ச்சஸ்' என்ற அமைப்பின் அபிவிருத்துறைப் பொருளியல் நிபுணர் ஒருவர்கருத்துத்தெரிவித்திருப்பதாக நெவர்லாந்து பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது

நெதர்லாந்தில் தற்போது சுமார் 100 தமிழ் அகதிகள் உள்ளனரென்பது குறிப்பிடத்தக்கது. (செ)

## ஒருவர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
ஒருவரான திரு பெஞ்சமின் இராஜரட்னம் நேற்றுப்பிற்பகல் விடுவிக்கப்பட்டுள்ளார். பிரயாணி ஒருவர் ஏற்கெனவே விடுவிக்கபபட்டார்.

'ஈழநாடு' பிரதிநிதி திரு. இ. சந்தசாமியும் மற்றும் பிள்ளையார் விலாஸ் ஸ்தாபனத்தின் கொழும்புக்கிளை முகாமையாளர், பஸ்சாரதிகள் இருவர் மேல் விசாரணைக்காகத்தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (மா)

## அடிமைத்தளை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)
வாதிடவும் அவர் தயங்கவில்லை ஆனுல் இந்திய சுதந்திரத்தின் பின் தென்னுட்டு மக்கள் நடாத்திய மாபெரும் போராட்டத்தால் தனது கொள்கையினை அவர் மாற்றிக்கொண்டார். அம்மக்கள் விரும்பும்வரை ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்கும் என அவர்கள் பயத்தைப் போக்கிய மாமனிதராக உயர்ந்தார் அவர்-

நாளைஎப்படியோ என்றுநாம் வாழும் இந்நிலையிலும் நல்லவர்களைச் சிந்திப்போம். அவர்களின் பாதையிலே போகப் பழகுவோம்.

# ஷெல்தாக்கி பெண்காயம்

(புலோலி)
பருத்தித்துறை இராணுவ முகாம் பகுதியிலிருந்து ஏவப்பட்ட மோட்டார் ஷெல்லினுல் முனையைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் காயமடைந்து பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை சுமார் 10 மணியளவில் இராணுவமுகாம் பகுதியிலிருந்து மோட்டார் ஷெல் தாக்குதல்கள் இடம் பெற்றன. இத்தாக்குதலின் போது ஷெல் விழுந்து வெடித்தமையினுல் முனைசின்னத் தோட்டத்தைச் சேர்ந்தஇளம் பெண்ணுன மரியதாஸ் மேரி மாக்கிரட் (35 வயது) காயங்களுக்குள்ளானுர்.

இதனைத் தொடர்ந்து குண்டுவெடிப்புச் சத்தங்களும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் கேட்டன. சற்று நேரம் பருத்தித்துறைப் [illegible] அல்லோல கல்லோலப்பட்டது.

# சுகாதாரப் பரிசோதகர்கள் கைது

[மட்டக்களப்பு]
மட்டக்களப்பு படுவான் கரைப் பகுதியில் சுகாதாரக் கடமையிலீடுபட்டிருந்த இரு பரிசோதகர்கள் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுகாதாரப் பரிசோதகர்களான திரு மனேகரன், திரு. தட்சணுசலம் ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர் (மா)

## பளைப்பகுதி பாடசாலைகள்

# இயங்கவில்லை

[பச்சிலைப்பள்ளி]
பளைப் பகுதியிலுள்ள சில பாடசாலைகள் கடந்த இரு வாரங்களாக இயங்கவில்லை.

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து இராணுவம்இரண்டு தடவைகள்வெளியேறியதினுல் ஏற்பட்ட [illegible] மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லவில்லை.

## சந்நிதி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கோவை ஏற்கெனவே ஜனுதிபதியிடம் யாழ். அரசாங்க அதிபரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது செரிந்ததே [வல்வை]

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லப்பா பொன்னம்மா

செல்லப்பா பொன்னம்மா காலமானுர். இவர் காலஞ்சென்ற செல்லப்பாவின் அன்பு மனைவியும், மகேஸ்வரி, கனகசபாபதி, ஆகியோரின் தாயாரும், ராஜ்கோபால்ஸ் பங்காளர் கோபாலசிங்கம், சந்திராதேவி ஆகியோரின் மாமியாரும்.முத்துத்தம்பி,பிள்ளைப்பொடி ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னுரின் ஈமைக்கிரியைகள் 27-5-86 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் 383 கோவில் வீதி நல்லூர் இல்லத்திலிருந்து ராசபாதைவீதி செம்பாட்டு மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்ருர், உறவினர்களுக்கு அறியத்தருகிறேம்.

தகவல்: தம்புகோபாலசிங்கம், 'ராஜ்கோபால்ஸ்' பெரிய கடை, யாழ்ப்பாணம்.
(C 2518)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு மே மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org